**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.30/2020**
**Prosecution Witness P.W.9**

.....

Name : திரு. பிச்சான் Calling : விவசாயி

Father's name : திரு.வெள்ளைக்கண்ணுஅழகன் Religion : இந்து

Village : சருகுவலையப்பட்டி Age : 42

Taluk : மேலூர், மதுரை மாவட்டம்.

நாள் - **19.02.2026.**

**(எதிரி ஆஜரில்லை).**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சருகுவலையபப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் தொழில் செய்து வருகிறேன். வழக்கின் சாட்சி அய்யாக்கண்ணு மகன் மணி என்பவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கில் இறந்து போன நயினார் என்பவரை எனக்கு தெரியாது. எதிரியை தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் சம்பவ இடத்தில் தயாரித்த அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் எதிரி எடுத்து ஆஜர் செய்த இந்த வழக்கில் அவர் பயன்படுத்திய ஆயுதத்தை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை விசாரித்த போது, 06.11.2016 ம் தேதி அதிகாலை 1.00 மணிக்கு கீழவளவு காவல்நிலைய குற்ற எண்.413/2016 பிரிவுகள் 294 பி, 302 ஆகியவற்றின் கீழ் பதிவு செய்த வழக்கின் சம்பவ இடத்தை நானும், மணி என்பவரும் உடன் இருந்து, அந்த பார்வைமகஜரில் கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. அதே இடத்தில் அதே நேரத்தில் சம்பவ இடத்தில் இருந்த இரத்தம்பட்ட மண், இரத்தம்படாதமண் ஆகியவற்றை காவல்ஆய்வாளர் என் முன்னிலையில் கைப்பற்றி தயார் செய்த அத்தாட்சியில் நான் கையொப்பம்

செய்தேன் என்றால் சரியல்ல. அன்று காலை 10.00 மணிக்கு இந்த வழக்கின் எதிரி ராமராஜ் என்ற ஊதகாத்து என்பவரை என் முன்னிலையிலும், மணி என்பவர் முன்னிலையிலும் கீழவளவு போலிசார் கைது செய்தார்கள் என்றும், அப்போது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தாகவும், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் எதிரி தன்னை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய பொருளை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதாகவும், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றும், காலை 11.00 மணியளவில் மெய்யப்பன்பட்டி விலக்கு அருகில் முள்புதரில் இருந்து, எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட கத்தியை ஆய்வாளர் என் முன்னிலையிலும், மணி என்பவர் முன்னிலையிலும் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சியிலும் நான் கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நானும், எதிரியும் உறவினர் என்பதால், எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.02.20 10:09:47 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.